DINAMALAR

23 OCT 2022

PAGE 6




■ புதுச்சேரி பல்கலைக் கழகம், துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில், ஐந்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

# இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புதுச்சேரி பல்கலை., புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, அக். 23–**

புதுச்சேரி பல்கலைக் கழகம் ஐந்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகம், புதுச்சேரி, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் ஐந்து நிறுவனங்களான, அசாம் திப்ருகார் பிராந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம், உத்திரபிரதேசம் கோரக்பூர் பிராந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம், மத்திய பிரதேசம் ஜபல்பூர் தேசிய பழங்குடியினர் ஆரோக்கிய ஆராய்ச்சி நிறுவனம், பீகார் பட்னா ராஜேந்திரா நினைவு மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி வெக்டார் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மையம் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

நிகழ்ச்சியில், இந்திய மருத்துவ ஆராய்ச்சி இயக்குநர்கள் அஷ்வனி குமார், கன்வர் நரேன், ரஜினிகாந்த் ஸ்ரீவஸ்தவா, அபரூப் தாஸ், டாக்டர் கிருஷ்ணா பாண்டே, சர்வதேச சுகாதாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறைத் தலைவர் முகேஷ் குமார், டில்லி இந்திய மருத்துவ ஆராய்ச்சி துணை இயக்குநர் ஜெனரல் லட்சுமிநாராயணன் பங்கேற்றனர்.

துணைவேந்தர் குர்மீத் சிங் பேசுகையில், இந்த புரிந்துணர்வு, தற்போதுள்ள சூழ்நிலைகளை பகுப்பாய்வு செய்வதற்கான பல பரிமான அணுகுமுறையைத் திறக்கும்.

கல்வி மற்றும் ஆராய்ச்சி அரங்கில் உள்ள சிக்கலான பிரச்னைகளுக்கு தீர்வு காண உதவும். இது பல்வேறு நிறுவனங்களில் உள்ள வளங்களைப் பகிர்வதற்கும் திறம்பட பயன்படுத்துவதற்கும் உதவும் என்றார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், ஐந்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களிலும் ஒரு புதிய முதுகலை படிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேரும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ. 20 ஆயிரம் வழங்கப்படும்.

மேலும் முனைவர் பட்டத்திற்கான இரட்டை வழிகாட்டி முறை, மாநாடுகள், பட்டறைகள் நடத்துதல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பரிமாறிக் கொள்ளுதல் உள்ளிட்ட செயல் திட்டங்கள் அமல்படுத்தப்பட உள்ளது.